Written by பி.இரயாகரன்
Wednesday, 19 December 2007 10:57 -

□□□□□□□□தூயரம் நிறைந்த ஓரு சம□கம் தான் தமிழ் இனம். இன்று எமது தமிழ் சம□கத்தின் இருப்பே களேவிக்குள்ளாகியுள்ளது. இப்படி எந்த நம்பிக்கையுமற்ற நிலையில், எந்தத் தூரும்பும்மின்றி சிதகைக்கப்பட்டுள்ளது. மக்களை தலமைமை தாங்கி சலெல்லும் வகையில், எந்த மாற்றும் கிடையாது.

இந்தப் போக்கினை அம்பலப்படுத்தும் கட்டுரகைளகை் கொண்ட ஓரு தொகுப்பு நூல் இது. பல்வறேு மனித அவலங்களை ஓருங்கே பேசே முனகைின்ற இந்த நூல், உங்களுடன் இதைப்பற்றி உரயைாட முனகைின்றது.

சிங்களப் பரேினவாதிகளும், பூலிகளும், பூலியல்லாத அரசு சார்பு கூழுக்களும், தமிழ் மக்களை இரக்கமற்ற வகையில் தமது அடிமகைளாகவே நடத்துகின்றனர். மக்கள் அந்தக் கொடூரத்தை எதிர்கொள்ள முடியாது, அடங்கி ஓடுங்கி ககைட்டி நிற்கின்றனர். இப்படி இருத்தல் தான், தமிழ் மக்களுக்கு அழகு என பரஸ்பரம் கூறிக்கொள்கின்றனர்.

இதை மீறி எதையும் ஆக்கப+ர்வமாக சயெ்யமுடியாது. அவை சயெ்யக் கூடாத ஒன்று. இப்படி எதையும் இவர்கள் அனுமதிப்பதில்லை. இது மீறப்படும் போது, காணாமல் போதல், கடத்தல், படுகொலை மூலம் பதிலளிக்கப்படுகின்றது. காலத்துக்கு காலம், இப்படி மாறி மாறி, தமிழ் இனத்தயைே அரித்து சிததை்து வந்தனர், வருகின்றனர்.

இந்த மனித தூயரத்தை மனதால் நினதை்துப் பார்க்க முடியாது. இதை எழுத்தில்

Written by பி.இரயாகரன்
Wednesday, 19 December 2007 10:57 -

கொண்டு வரமுடியாது. அந்தளவுக்கு இந்த துயரம் கொடுமையானது, கொடூரமானது. அன்றாடம் இதை வாழ்வாக அனுபவிப்பவன் படுகின்ற வதேனைகள், படு பயங்கரமானவை.

உரிமையைக் கோரிய சமூகம், இன்று வாழ்வையே பறிகொடுத்து நிற்கின்ற பரிதாபம். சின்னச் சின்ன அற்ப உணர்வுகளைக் கூட, துயரம் நிறைந்த வாழ்வாக அனுபவிக்கின்ற ஓரு இனமாக தமிழினம் சிதைந்துவிட்டது. சாதாரணமான வாழ்வைக் கூட இயல்பாக வாழமுடியாத வகையில், மக்கள் விரோத சக்திகளின் கொடூரமான நடத்தைகள் சுயெல்கள் பதிலளிக்கின்றன.

இதனால் கூடும்ப உறுப்பினர்களை இழந்து பூலம்பும் கூழந்தை, மனைவி, தாய். இப்படி பல உறவு சார்ந்த சமூகச் சிதைவுகள். அவர்களின் சொந்த அன்றாட வாழ்க்கையில் தொடரும் பற்பல சோகங்கள். இதை அற்பத்தனமாகவே எடுத்து, கண்டும் காணாமல் விட்டுவிடுகின்ற பூறக்கணிப்புக்கள். மனித உணர்வுகள் மீது, உணர்ச்சியற்று கல்லாகிப் போன சமூகத் தன்மை.

இதில் கணவனை இழக்கும் ஓவ்வொரு பெண்ணும் சந்திக்கும், மனித உணர்ச்சியும் உணர்வும் சார்ந்த பாலியல் நெருக்கடிகள். சமூகத்தில் இதைக் கண்டு கொள்ளாத அசமந்தமான வக்கிரமான போக்குகள். ஒழுக்கமென்ற பெயரில், சமூக அதிகாரம் கொண்ட அதிகார மையங்கள். இப்படி எண்ணற்ற உளவியல் சார்ந்த, மனம் சார்ந்த மனித துயரங்கள். கண்ணுக்கு பூலனாகாத வகையில், சமூகத்தினுள் சீழ் பிடித்து நாறுகின்றது.

Written by பி.இரயாகரன்
Wednesday, 19 December 2007 10:57 -

இதன் மலேல் தான் ஜனநாயகம் தசேியம் என்று, ஒன்றயைொன்று எதிராக நிறுத்தியபடி அரசியல் நடனம் ஆடுகின்றனர். இவர்கள் ம□ச்சுக்கு ம□ச்சு மக்களின் விடுதலயைபை் பற்றி பசேுகின்றனர். இந்த ந□ல் இதை அம்பலப்படுத்துவதுடன், சாதாரண மனிதனின் உள்ளத்துடன் உணர்வுடன் நின்று பசே முற்படுகின்றது.

இப்படி மனித அவலங்களை பற்றி, மக்களுடன் பசே முற்படுகின்றது இந்த ந□ல். நாம் தீ ர்வாக ஒன்றை மட்டுமே க□ற முற்படுகின்றோம். நாங்கள் வாழ்வில் உணருகின்ற எங்கள் பிரச்சனகைக்கு, ஓரு தீ ர்வதை் தடேி நாங்கள் பாேராடாத வரை, மாற்று தீ ர்வு என எதுவும் எமக்கு கிடகை்கப்பாேவதில்லை. எப்படிப் பாேராடுவது என்பது க□ட, நாம் எமது சாெந்த ச□ழல் சார்ந்து கற்றுக்காெள்வதில் தான் அடங்கியுள்ளது. இதவைிட மாற்று எதயைும், யாரும் தங்கத்தட்டில் ஏந்தி வந்து தரப்பாேவதில்லை.

பி.இரயாகரன்
19.12.2007